



**Vol : 1** **Issue : 2** **March 2012**



## Editorial Team

S.Natarajan.
H.Chandrasekaran
J.Chandrasekaran.
Rajan Ganesh

## Reach Foundation

**Founder**
Dr. T.Satyamurthy

**Chairman**
Shri.Ravi Sam

**Trustees**
Shri Sundhar Bharadwaj
Shri.P.N.Subramaniam
Shri S.Hariharan
Shri H.Chandrasekaran
(Treasurer)


**PRO**
Shri J.Chandrasekaran



email: editor.reach@gmail.com

Address
**H.Chandrasekaran**
No:68,1st Main Road,
CIT Nagar, Nandanam,
Chennai-600035


**உள்ளே...**






*From the founder's desk…*

# Conservation in Ancient India

## Part III

## Mamallapuram records the earliest technique of mending of Sculptures

(Continued from Feb-2012 issue)

To revert to the rules for restoration of the temple structures: when extreme damage occurs to the structures to anga, upangas by vegetation, trees, anthills, bees etc., there is no need to build a new balalaya to carry out renovation. Balalaya is a ritual to capture the power vested in the main deity in a pot and seal the same to keep in a temporary room or in another shrine, and continue to offer worship, until renovation is completed. It is also invoked in the painted panel of the deity or in a wooden replica of the deity depending upon the duration of the repair in the main shrine. In case of very shorter duration of the conservation works the powers are transferred to the Kalasa (Water pot) and for a period up to six months painted panel and exceeding that wooden replica is prescribed.

It is known as Ilankoil and even in case of construction of a new temple the Balalaya is obligatory.

"Balalayam vina Mulalayam Nasti"

Such repair work is called Navikarana. The original deity is reconsecrated and vested with a power taken out of the sealed pot. Instead of this, Sakti or power of the temple could be invoked in the Mahabera (the principal Vimana) and the renovation work carried out. When, however, the Vimana is fallen or damaged, worn-out, devoid of anga struck by lightening, its color got faded, or the very space lost, a balalaya should be built and rebuilding carried out. Shri Prasna Samhita also agrees with this method. However, it adds that if differences of options crop up, any one of the following three models may be adopted to settle the dispute, (a) Samyama-consensus (b) Chitka (lot) and (c) the decision of great pious men(Mahatmas)

A point of great significance to modern conservators is the following passage which stipulates:

(A) In restoration, the same form and the proportion should be maintained.

(B) The same school, to which the temple or sculpture belongs, should be followed.

(C) The same material should only be used.

(D) The same measurements should be maintained.

(E) When done otherwise, calamities would befall on the Ruler /the people.

### Restoration of Sculptures

The earliest reference to a restoration of sculpture is recorded in the introductory part of the Sanskrit composition known as Avantisundarikatha by the poet Dandin, who is considered to be the contemporary of Pallava king Rajasimha, in the beginning of the 8th CE. The reference is to the restoration of the arm near the wrist of the sculpture of Vishnu Anantasayin in the shore temple complex at Mamallapuram (Mahabalipuram).



Dandin himself was a learned person in architecture and temple arts. He refers in this work to one Lalitalaya, son of Mandhata, a great master in architectural science who could surpass even the Yavanas. As already stated, the Ananthasayasin sculpture was slightly damaged in one of its arms, near the wrist. Lalitalaya restored the broken part.

Visiting the royal court at Kanchi, he invited the poet Dandin to come to Mamallapuram to see the restoration he had done. Dandin went to Mamallapuram with his friends and saw the sculpture by the side of the waves. “In the enchanting environment of cool breeze, and the waves almost touching the feet of the image Anantasayin, he saw the extraordinary skill of the sculptor in the restoration work. The work was so perfect that he could not notice the wrist, (Manibandha), any traces of restoration. He admired the work of Lalitalaya”

This account brings out many important facts: (a) it shows that as early as the 8th century CE the restoration of damaged parts of a sculpture was recognized as a skilled art: (b)that damaged sculptures could be restored: (c) even poets and learned men took keen interest in examining such restoration work and (d) that the restored part should be absolutely true to the original. Further this would go against the popular belief that if a stone sculpture is damaged, it should not be worshipped.

There are several agamic passages dealing with the specific question of what should be done with broken sculptures. They treat them under prayaschitta vidhi. There are minor variations in rules between one text and another.

The deities are classified differently as Self-manifest image Svayambhu Murtis

Those consecrated by sages, Arsha Pratishta Humanly made, Manusha Pratishta.

In the case of Svambhu and Arsha Pratishta there is no question of replacements.

In the case of humanly made the sculptures beyond repairs should be immersed in deep water or dropped in River or sea.. For this purpose, the parts of sculpture are divided into major limbs and minor limbs. Textual authorities give many options with specifications for guidance in all such cases of damages. The Mariachi Samhita, an early Vaikhanasa text of the Vaishnavites, says that the stone sculpture, if found damaged in parts other than Mahangas, should be repaired and not discarded. Its divine power should be invoked in Balalaya and after mending it should be reconsecrated.

**We will probe into other rules for re consecration in our next Issue.**

*(to be continued.....)*

**– T.Satyamurthy**



# காஞ்சி 100 கால் மண்டபம்

'நகரேஷு காஞ்சி' என்று காளிதாஸரால் வியக்கப்பட்ட காஞ்சிபுரத்தின் பெருமைகள் பெரும்பாணாற்றுப்படை, மணிமேகலை ஆகிய இலக்கியங்களிலும் சீன யாத்திரீகர் யுவான் சுவாங்கின் பயணக்கட்டுரையிலும் காணக் கிடைக்கின்றன. இக்கோயில் நகரம் சிறந்த கல்வித் தலமாகவும் இருந்துள்ளது. இங்கு இருந்த 'கடிக...' யில் (கடிகை பல்கலைக் கழகம்) பயின்ற தர்மபாலர் பின்னர் நாளந்தா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிந்தார் என்பதையும் நாம் அறிகிறோம்.

இந்நகரத்தின் ஒரு பகுதியான சின்னக் காஞ்சிபுரத்தில், சிறந்த வைணவத்தலமாக விளங்கும் வரதராஜப் பெருமாள் கோயில் உள்ளது. திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோரால் மங்களாசாசனம் பெற்ற தலச்சிறப்புடன் உள்ள இத்திருத்தலம், யானை வடிவிலிருந்த இந்திரன், நரசிம்ம மூர்த்தியை வழிபட்டு சாபவிமோசனம் பெற்றதால் 'அத்திகிரி' என்றும் அழைக்கப்படுகிறது. பல்லவ, சோழ, விஜயநகர சாம்ராஜ்யங்களால் பெரும் அளவில் நிவந்தங்கள் வழங்கப்பெற்ற இக்கோயிலில், விஜய நகர மன்னர்களின் காலத்தில் கல்யாண மண்டபம், துலாபார மண்டபம், ஊஞ்சல் மண்டபம் ஆகியவை நிர்மாணிக்கப்பட்டன. கோயிலின் மேற்கு வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்தவுடன் இடது பக்கத்தில் அனந்த தீர்த்தத்தின் முன்னே கலைநயம் மிக்க 100 கால் மண்டபம் உள்ளது.

மண்டபத்தின் தோற்றம்

விஜய நகர மன்னர்களின் கலை அழகை வெளிப்படுத்தும் அழகிய கலைப் பொக்கிஷம் இது! மண்டபத்து வெளித் தூண்களில் குதிரை வீரர்கள் அமர்ந்த கோலத்தில்காட்சி தருகின்றனர். மண்டபத்தின் கொடிங்கையிலிருந்து தொங்கும் கற்சங்கிலியும், கொடுங்கையின் மேற்பரப்பில் வடிவமைக்கப்பட்ட பாயும் புலியும், புறாக்களும், நேரில் நிற்பவை போல் காட்சி தருவது வர்ணனைக்கு மீறிய கலைப் படைப்புகள்!

மண்டபத்தின் நடுவே பெருமாள் எழுந்தருளும் மேடை உள்ளது. இந்த மேடை மண்டபத்தின் அடிப்பகுதி ஆமை வடிவில் அமைக்கப் பட்டுள்ளது. இப்பீடத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சிறிய சிலைகள் மரச் சிற்பங்கள் போன்று தனியே செய்யப்பட்டு இங்கு பொருத்தப் பட்டுள்ளன. இவை அக்காலச் சிற்பிகளின் கைவண்ணத்தின் அதீத உயரத்தைப் பறை சாற்றுகின்றன.

ராமாயண, மகாபாரதக் காட்சிகள், திருமாலின் பல்வேறு வடிவங்கள், கிராமிய வாழ்வியலைக் காட்டும்





குறவன் குறத்தி, நடனப் பெண்மணிகள், குழந்தையை மடியில் ஏந்தும் தாய், வித்தை காட்டும் வீரர்கள், கிருஷ்ண லீலை, தசாவதாரக் காட்சிகள், பல கரங்கள் கொண்ட சக்கரத்தாழ்வார் ஆகியவற்றோடு, அசுரனின் மீது சங்கு சக்கரம் ஏந்தி நடராஜரைப் போல் நடனம் ஆடும் பெருமாளையும் காணலாம்!

இந்த அழகிய சிற்பங்களைக் கண்டு களிக்கமுடியா வண்ணம், சுமார் இரண்டு ஆண்டுகள் முன்பு, சுண்ணாம்பு அடிக்கப்பட்ட மண்டபத்தைக் கண்டு அதற்சியுற்ற நம் கண்களுக்கு இப்போது செல்கையில், இனிய அதிர்ச்சி காத்திருக்கிறது. மிகவும் நுணுக்கமான முறையில், சுண்ணாம்பு அகற்றப்பட்டு, கற்கள் முறையாக Pointing செய்யப்பட்டு, விழுந்துவிட்ட கொடுங்கைகள் சீர் செய்யப்பட்டு, தற்போது தரைக் கற்கள் சீராகப் பதிக்கப்பட்டு மண்டபம், பழைய கலை அழகை மீண்டும் பெற்ற புதுமண மாப்பிள்ளை போல் காட்சி அளிக்கிறது. இந்த புனர் நிர்மானத்தை யார் செய்தார்கள் என்று வினவியபோது, ‘அட, நமது ரீச் பவுண்டேஷன்’ என்று அறிந்தபோது மனம் மகிழ்வுற்றது. மனமும், தனமும் மிக்க பெருந்தகை ஒருவர், ஆரவாரம் இன்றி பொருளுதவி செய்து, ரீச் பவுண்டேஷனின் மூலம் இம்மண்டபத்தை சீர் செய்கின்றார் என்று அறிந்த போது, பழங்காலப் பொக்கிஷங்களைப் பேணி காக்க முன்வரும் நல்லோர் இன்றும் இப்புவியில் உள்ளார்கள் என்ற நம்பிக்கை துளிர்த்தது!

என்னைப் போன்ற தொல்லியலாளர்கள் மட்டும் இன்றி, எல்லாரும் சென்று கண்டு களிக்கும் வண்ணம், புதுப் பொலிவுடன் மிளிரும் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயிலில் உள்ள 100 கால் மண்டபத்தினை அனைவரும் சென்று காணவேண்டும்!






– கி. ஸ்ரீதரன்

(தமிழக அரசு
தொல்லியல் துறை
கண்காணிப்பாளர்பணி நிறைவு)

# கலோனியல் கஸின்ஸ்

(கசின்2, சென்ற இதழ் தொடர்ச்சி...)

ஆஸ்கார் அவார்டு வாங்கிய இந்தியப் படம் Slumdog Millionaire பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். பம்பாய்ச் சேரிப் பகுதியில் இருக்கும் குழந்தைகளை மையமாக வைத்து எடுக்கப்பட்டத் திரைப்படம். 1774ல் மெட்ராஸுக்கு இங்கிலாந்திலிருந்து ஒரு ஸ்லம்டாக் மில்லியனர் வந்திறங்கினார். வந்த போது அவர் மில்லியனர் இல்லை. பிறகு இந்தியாவில் மில்லியனராக – கோடீஸ்வரராக ஆனார். அவர்தான் ராபர்ட் கிளைவ்.



ராபர்ட் கிளைவ்ராணுவ உடையில்


அவர் படித்ததில்லை. இங்கிலாந்தில் ஷ்ரப்ஷையரில் பிறந்த அவர், சிறு வயதிலிருந்தே ரவுடியாக வளர்ந்தார். படிப்பும் ஏறவில்லை. பல பள்ளிகளுக்கு மாற்றி மாற்றிப் போட்டும், ஆசிரியர்களால் அவர் மூளையில் பாடங்களை ஏற்ற முடியவில்லை. தங்களது தோல்வியை ஒப்புக்கொண்டனர். பொறுக்கமுடியாத அவரது பெற்றோர், அவரை மான்செஸ்டரில் உள்ள அவரது கண்டிப்பு மிகுந்த சித்தி வீட்டிற்கு அனுப்பினர். ஆனால் அங்கும் ஒரு பேட்டை ரவுடிக்கு உண்டான கல்யாண குணங்களுடன் விளங்கிய ராபர்ட், பிக் பாக்கெட், கட்டப் பஞ்சாயத்து, கடைகளில் மாமூல், மாமூல் தராத கடைகளுக்குள் சாக்கடை நீரினைத் திருப்பி விடுவது, வயதான பெரியவர்களின் கவனத்தைத் திருப்பி, கைகளில் அகப்பட்டதை திருடிக் கொண்டு ஓடுவது என்று இருந்த அவரை பொறுக்க முடியாமல், கடைசியாக கப்பல் ஏற்றி வந்தாரை வாழ வைக்கும் சென்னைக்கு அனுப்பி வைத்தனர். அப்போது கப்பலில் சென்னைக்கு குமாஸ்தாக்களையும், கிழக்கிந்தியப் படைகளுக்கு சோல்ஜர்களையும் ஜான் கம்பெனி அனுப்பி வைத்துக் கொண்டிருந்தது. வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அவரைப் போலத்தான்! வீட்டை விட்டு ஓடிப் போனவர்கள், சிறையிலிருந்து தப்பியவர்கள், திருடர்கள், கற்பழிப்பு குற்றத்தில் மாட்டிக் கொண்டு தப்பி ஓடியவர்கள், இன்னும் இன்ன பிற பலான காரியங்களை செய்து விட்டுத் தப்பியவர்களுக்கும் புகலிடம் இந்த கிழக்கிந்தியக் கம்பெனி எனும் ஜான் கம்பெனிதான்.

வெயில் கொளுத்தும் மே மாதம், ராபர்ட் சென்னைக்கு வந்த நேரம், பிரிட்டிஷாருக்கு அதிர்ஷ்டம் தொடங்கியது. இந்தியாவுக்கு துரதிருஷ்டம் ஆரம்பித்தது. மெட்ராஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள

ஆர்சனல்தான் (ஆயுதக் கிடக்கு) ராபர்ட்க்கு முதல் வாசஸ்தலம். பல்லைக் கடித்துக் கொண்டு நாட்களைக் கடத்தி வந்தவருக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. தாங்க முடியாத வெயில், அடிக்கடி ஏற்படும் வயிற்று போக்கு ராபர்டை சோகத்திற்கு இட்டுச்சென்றது. இரு முறை தற்கொலைக்கு முயன்றார். (பின்னால்) ஆற்காடு சந்தா சாஹிப்பின் படை வீரர்களை குறி பார்த்து சுட்ட கிளைவுக்கு, தனது தலையை நோக்கி துப்பாக்கியால் சுட்டுக்கொள்ளத் தெரியவில்லை! இரு முறை தப்பித்து விட்டார்! அதற்கென்ன, பின்னர்தான் இந்தியாவையே அவர் ‘சுட்டு’விட்டாரே!

‘ஆற்காடு யுத்தத்தில் கொஞ்சம் பணம் பார்த்தவர், ப்ளாஸி யுத்தத்தில் ஒரு ஜாக்பாட்டையே அடித்து விட்டு ஏ.ஆர்.ரஹ்மானின் ம்யுஸிக் இல்லாமல், ரஸூல் பூக்குட்டியின் ரெகார்டிங் இல்லாமல் ஒரு மில்லியனராக ஸ்லம்டாக் மில்லியனாரான கிளைவ், இங்கிலாநது சென்று, தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். ஆனால், தேர்தலில் முறைகேடு செய்ததற்காக (என்ன, நம்மூர் மாதிரி கோல்மால்தான்!) பதவி பறிக்கப்பட்டது. கம்பெனி சும்மா இருக்குமா? அவரை மீண்டும் கடலூருக்கு பக்கத்தில் இருக்கும் டேவிட் கோட்டைக்கு கவர்னராக அனுப்பியது. (இப்போதும் இப்படித்தானே! ஆளும்கட்சியைச் சார்ந்த பிரபலம், தேர்தலில் தோற்றுவிட்டால், ஒரு மாநிலத்திற்கு கவர்னராய் அனுப்புவது, தொடர்ந்து வருகிறது.)

வடகலை தென்கலைச் சண்டை அடிக்கடி காஞ்சீபுரம் தேவராஜ ஸ்வாமி கோயிலில் நடப்பது தெரியும். 1776ல் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியிலும், ஜார்ஜ் பிகட் மெட்ராஸ் கவர்னராய் இருந்தபோது திருவல்லிக்கேணியிலும் நடந்தது. கவர்னருக்கு துபாஷியாக இருந்தவர் மணலி முத்துகிருஷ்ண



முதலி. அவர் வடகலை முதலி. திருவல்லிக்கேணி பார்த்தசாரதிக் கோயிலில் வடகலை – தென்கலைச் சண்டை நடந்த போது, துபாஷியின் உதவியோடு பார்த்தசாரதிப் பெருமாளுக்கு வடகலை நாமம் போட உத்தரவு ஆயிற்று. தென்கலையார் கொதித்தனர். பிகட் பாளையக்காரர் படையையும், கம்பெனி படையையும் அனுப்பி, வடகலையார் உரிமையைப் பாதுகாக்க உத்தரவு இட்டார். ஆனால், 1780ல் ஜான் ஒயிட் கவர்னராக இருந்த போது, இந்த உத்தரவு மாற்றப் பட்டதோடு, மீண்டும் பார்த்தசாரதிப் பெருமாள் தென்கலை ஆனார்! 1790ல் மீண்டும் வடகலையார் தமது கோரிக்கையை கம்பெனி அதிகாரிகளிடம் முறையிட்டனர். பிகட் மற்றும் சான்டர்ஸ் ஆணைகளை வடகலையார் மேற்கோள் காட்டி விவாதித்தனர். முடிவு மேற்கு பார்த்து இருக்கும் துளசிங்கப் பெருமாளுக்கு வடகலை நாமமும்,கிழக்குப் பார்த்து இருக்கும் பார்த்தசாரதிப் பெருமாளுக்கு தென்கலை நாமமும் போட

உத்தரவு ஆயிற்று. வீணானது நாமக் கட்டிகள்தான்!

1782ல் தம்பிப்படை எனும் மெட்ராஸ் ரெஜிமெண்டில் சேர வந்த காலின் மெகன்ஸியே தற்போதைய இந்திய வரலாற்றுக்கு பெரிதும் உதவினார் என்று சொல்லலாம். முதன்முதலாக நில அளவுப் படையில் இருந்த அவர், வரலாற்று ஆவணங்களை சேர்ப்பதில் ஆர்வமாக இருந்தார். பழங்கால நாணயங்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், நகைகள் ஆகியவற்றை சேகரிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டார். இரு தெலுங்கு பிராம்மணர்களை தமக்கு உதவியாளராக அமர்த்திக் கொண்டார். மெக்கென்ஸிக்குப் பிறகுதான் அனேகருக்கு புத்தருக்கும், சமண தீர்த்தங்கரருக்கும் உள்ள வித்தியாசம் தெரிய வந்தது. (இப்போதும் பலருக்கு இந்த வித்தியாசம் தெரியாது!) 1815ல் இந்தியத் தலைமை நில அளவு ஆய்வாளர் ஆனார். மெக்கென்ஸி தென்இந்திய இளைஞர்களுக்கு கல்வெட்டுப் பயிற்சி அளித்தார். தவிர, ஹைதரலி பற்றி முதன் முதலாக ஒரு கையேடும் எழுதினார்.

மாமல்லபுரத்து சிற்பங்கள் சீன சிற்பங்கள் என்று பெங்கால் ஏசியாட்டிக் சொஸைடியில் டிஸம்பர் 1795ல் கோல்டிங்ஹாம் ஒரு கட்டுரை வாசித்தார். ஆனால் 1801ல் காலின் மெக்கென்ஸி வெங்கட லெக்ஷ்மணய்யா மற்றும் மாமல்லபுர தலசயனப் பெருமாள் கோயில் பட்டருடனும் சேர்ந்து மாமல்லபுர சிற்பங்களை ஆராய்ந்து, இவை இந்து புராண சிற்பங்கள் என்றும், சீனத்துக்கும் மாமல்லபுரத்துக்கும் சம்பந்தமே இல்லை என்றும் ஒரு கட்டுரை வாசித்தார். இதுவே, பெங்கால் சொஸையிட்டியில் மாமல்லபுரம் பற்றிய இரண்டாவது அறிமுகம்.

மூன்றாம் மைசூர் போரில் (1792 மார்ச் 18) திப்புவை வெற்றி கண்ட கார்ன் வாலிஸ் அமெரிக்க சுதந்திரப் போரில் ஜார்ஜ் வாஷிங்டனால், ஓட ஓட விரட்டப்பட்டவர். அமெரிக்காவில் தோல்வி கண்டவருக்கு இந்தியாவில், சென்ற இடமெல்லாம் வெற்றி. (நம் அரசர்களிடம் ஒற்றுமை இல்லாதது, காட்டிக் கொடுப்பது, பதவிக்கு மயங்குவது என்று இன்ன பல காரணங்கள்). தோல்வியுற்ற திப்பு தன் ஆட்சிப் பகுதியில் பாதியை இழந்தார். மேலும் அவர் மூன்று மில்லியன் ரூபாய் இழப்பீடு தரவேண்டும் என்றும் அதற்கு பிணையாக இரு மகன்களை தரவேண்டும் என்று ஒப்பந்தம் ஆனது. திப்புவின் பிள்ளைகள் இருவரும், செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் வைக்கப்பட்டனர். ஜார்ஜ் பள்ளியில் படிக்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கு மேல்நாட்டுப் பழக்க வழக்கங்கள் கற்று தரப்பட்டதோடு, மதமாற்றம் செய்யவும் ரகசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதை அறிந்த திப்பு சுல்தான் பிணைப் பணத்தை உடனே தந்து, தன் மகன்களை மீட்டுக் கொண்டுவிட்டார். மத பாசமா, பிள்ளைப் பாசமா?

கார்ன் வாலிஸ் தனது ஆட்சியில், வெள்ளைக்காரர்கள் மட்டுமே கம்பெனிப் பணியில் இருக்க வேண்டும் என்று கூறி, எல்லா இந்தியர்களையும் வீட்டிற்கு அனுப்பிவிட்டார். (ரொம்ப பாசக்கார வெள்ளைக்காரர்). ஆனால் ஜிஷீஜீணீக்ஷ் எனும் இந்திய போர்த்துக்கீசிய கலப்பின மக்களுக்கு கம்பெனியில் வேலை அளித்தார்.

கார்ன் வாலிஸ் எங்கு சென்றாலும், ஓர் ஓவியரை உடன் அழைத்துச் செல்வது வழக்கம். நிகழ்வுகளை அப்படியே அவர் படம் வரையச் சொல்வார்.(போட்டோகிராபி வராத நேரம்.)ஆனால் கார்ன் வாலிஸ் திப்புவின்



திப்புவின் பிள்ளைகளை பிணையாகப் பெறுதல்

குழந்தைகளுடன் இருக்கும் படம் கற்பனையாக மற்றொரு ஓவியரால், இங்கிலாந்தில் வரையப் பட்டதாக சொல்கிறார்கள்.

தாமஸ் டேனியல் மற்றும் வில்லியம் டேனியல் 1786 முதல் 1794 வரை இந்தியாவின் பல இடங்களுக்கு சுற்றுப் பயணம் செய்து,பார்தவற்றை எல்லாம் படங்களாக வரைந்தனர். சிலவற்றை என்கிரேவ் செய்தனர். இவர்கள் சித்தப்பா, அண்ணன் மகன் உறவு. தாமஸ் வரையும் படங்களில் மனிதன் அல்லது மிருகம் கண்டிப்பாக இருக்கும், வில்லியம் வரையும் படங்களில் முக்கியத்துவம் தரப்பட்டது கட்டிடங்களக்குத்தான், சென்னை கோட்டை மியூசியத்தில் இவர்கள் வரைந்த படங்களைக் காணலாம்.

கிழக்கு இந்தியக் கம்பெனியின் தாரக மந்திரங்கள்: மூன்று ‘M’ – ன்கள்!

MILITARY, MERCHANDISE & MISSIONARY – அதாவது


ராணுவம், வியாபாரம், மற்றும் மத போதகம்

வாடாஜி பவுஷ்கர் பந்த் என்ற மராத்திய பிராமணர் 17ம் நூற்றாண்டில் மராத்திய அரசர் ஷாஜி பான்ஸ்லே தெற்கே படை எடுத்து வந்த போது உடன் வந்தவர். ஷாஜிக்கு வாடாஜியின் வீரமும் சேவையும் பிடித்துப் போய்விட்டது. கிட்டதட்ட 200 சதுரமைல் பரப்புள்ள ஆரணி பகுதிக்கு அவரை ஜாகிர்தாராக ஆக்கினார். ஆண்டுதோறும் ஷாஜிக்கு நஜர் பணம் என்ற கப்பத்தை வாடாஜி செலுத்திவந்து தன்னை நிலைபடுத்திக் கொண்டார். 1759ல் அயர் கூட், ப்ரென்ச் லாலியை ஆரணி கோட்டைக்கு அருகே தோற்கடித்தார். 1761ல் ஆங்கிலேயரின் நண்பரான ஆற்காட் நவாப் முஹமதலி வாலாஜா ஆரணி பகுதியை தான் எடுத்துக் கொண்டார். 1789ல் ஸ்ரீனிவாச ராவ் என்பவர் ஆரணி ஜாகிர்தராக ஆனார். இவர் வழி வந்தவர் தான் சென்ற நூற்றாண்டில் பிரபல நடிகராக இருந்த நாட் அண்ணாஜி ராவ்.இவரது புதல்வர் பஜன் சாம்ராட் ஹரிதாஸ் கிரி ஸ்வாமிகள்.

பிரிட்டிஷார் மிகவும் பயந்தது :பாபுக்கள் (அரசு ஊழியர்) பனியாக்கள் (வியாபாரிகள்) பிராமின் (பிராமணர்கள்) என்ற மூன்று B க்களைக் கண்டுதான்.

**– வகுளா எஸ்.வரதராஜன்**

(வரலாற்று ஆய்வாளர் மற்றும் கட்டுரையாளர்)



Annamalai Hills

# Moon, Mountain and Mysticism

**Dharma, Seva and the Vedic Civilisation**

The Vedic civilization evolved on the banks of Sindhu and Saraswati with Dharma as the basis of evolution. Though it got the name "Hinduism" in later times, it is still denoted as *Sanatana Dharma*. The*Itihasas* and *Puranas* have vividly described the crushing of *Adharma* by different *Avatars* of almighty Bhagwan, whenever it raises its head and attempts to rule over this world. In the *Kaliyuga*, though Bhagwan doesn't descend as an Avatar, he establishes the reign of Dharma through His Blessed Avatara Purushas such as Adi Sankara, Ramanuja, Ramana Maharishi and Ragavendra, et al. Such mahatmas bless and guide people through their immortal *dharmopadesas*.

A huge threat is looming large over this bhumi known for *punya* and Dharma, surrounded by Adharmic alien forces. It is essential for us to stick to Dharma to destroy the alien forces and safeguard our motherland. Though many Dharmic concepts have been described in our Vedic religion, for us, the two most important are "*Maheswara Seva*" and "*Mahajana Seva*".

Maheswara Seva caters to (i) protection of temples and continuation of worship rituals flawlessly (ii) construction of temples in places where there are none and daily rituals of worship (iii) renovation of dilapidated temples and resumption of worship and (iv) organising temple related festivals involving the local populace across castes and communities. Mahajana Seva caters to donating food, clothing, houses, education and medicines for the poor, downtrodden and incapacitated people, apart from social and community services.

The sacred town of Thiruvannamalai stands testimony to the fact that Mahatmas reside permanently in places where *Maheswara Seva* and *Mahajana Seva* are carried out perennially without hindrance. The thought that my recent experience in Thiruvannamalai during *Chitra Pournami* would be meaningless and become useless if it is not shared with others, has resulted in this column.

**A Siddhar Bhumi known for Sevas**

Thiruvannamalai is considered a "Siddhar Bhumi", that is, a land of Siddhars. Siddhars are considered representatives of God with complete mastery over the powers of nature. They are believed to have conquered death and live anywhere and everywhere without being seen, recognized or identified by ordinary humans, and other living beings. Certain places in general and mountain ranges in particular are considered permanent seats of Siddhars; Thiruvannamalai is one such sacred place.

Gauthamar, Arunagiri Yogi, Namachivayar, Namachivayam (author of '*Annamalai Venba*'), Viroobatcha Devar, Arunagiri Nathar (author of '*Thiruppugazh*'), Kondappa Desikar, Jadini Shanmuga Yogini

Ammal, Ammani Ammal, Seshadri Swamigal, Ramana Maharishi, Yogi Ramsuratkumar are some of the great*Mahaans* of later times, who lived and attained Siddhi in Thiruvannamalai, apart from the countless Siddhars who are believed to be permanently seated in Annamalai.

(Ref: ***Thiruvannamalai***, V. Narayanaswami, Manivasagar Pathippakam, Chennai, 1996.)

Ramana Maharshi Ashram, Seshadri Swamigal Ashram, Yogi Ramsuratkumar Ashram, the Mathams established by the disciples of Namachivayar, are some of the organisations which have been rendering great service to the people. In the recent times, in order to arrest the illegal and immoral evangelical and conversion activities by the Church and Christian Missionaries and also to take care of the needs of the Hindu masses, many Hindu organizations have opened branches in Thiruvannamalai. Kanchi Matham opened a branch recently.

**History of Thiruvannamalai Temple**

Stone temples came into being only during the Pallava Dynasty. Thiruvannamalai Temple is one of the earliest stone temples built by the Pallava Kings. Later, the Cholas, Vijayanagar Kings, Thanjavur Nayaks and others built many sanctorums, mandapams and towers. The kings of the Tulu dynasty also made some edifices.

The Chola period inscriptions found in this temple start from the time of Vijayalaya Chola's (849 C.E - 8th century inscriptions) and go for about 400 years of Chola Samrajya up to 13th century CE, giving us a lot of historical information.



Areal View of Thiruvannamalai Temple

Then, from 13th century CE to 16th century CE, kings like Kadavarkon Kopperu Singan, Posala King Veera Vallaalan, Vijayanagara Kings (Krishnadevaraya & others), Thanjavur Nayaks (Sevappa Nayak & others) marked their inscriptions with vivid details of their times. The inscriptions found in this temple are in Tamil, Sanskrit and Kannada.

Sage Meikkandaar, who blessed us with the divine treatise "Sivagnana Botham" donated a lot to this temple on 22-5-1232 CE. Even Kings from far off places (Ganges and nearby kingdoms) donated wealth for this temple.

**Annamalai in Literature**

Annamalai has found place in all kinds of literatures such as Puranas, Anthathis, Venbas, Prabandhams, Pathikams, Vannam, Sathakam, Kovai, Maalai, Viruththam, Keertanas, Sthothras, Kummi and plays.

As far as Sangam literatures is concerned, Thiruvannamalai is mentioned in Akanaanuru and Natrinai. Thirugnana Sambandar (Thevaram), Thirunavukkarasar (Thevaram), Sekkizhar (Periyapuranam) and Ramalinga Swamigal (Thiruvarutpa) sung hymns on Thiruvannamalai. More than 60 Sthal Purans are available in Tamil, and in Sanskrit we have Arunachala Stotras and Arunachala Ashtakam. Thiruvannamalai is mentioned even in Keno Upanishad.

**Sanctity of Pournami**

Although many festivals are celebrated in Thiruvannamalai every month, Karthikai Deepam and Chithirai Thiruvizha are quite famous and both culminate on Pournami (full moon) Pournami is a very important day for Hindus, and apart from Karthikai Deepam and Chithra Pournami, we have festivals like Thai Pusam, Vaikasi Visakam, Avani Avittam, Masi Magam (Ganga Snan in Prayag) and Panguni Uthram (Holi in northern and western India) being grandly celebrated on Pournami.

Satyanarayana Puja is commonly performed on Pournami Day by people across the country. Pournami Vrat has been observed by Hindus since ancient times. People observe fast right from morning and end their fast only after sighting the moon and performing puja in the evening.

Thiruvannamalai is a place where Bhagwan Shiva himself stands as Annamalai (mountain). That is why it attracts millions of devotees from world over for every Paurnami Day!

**– B R Haran**
Freelance Journalist, Chennai

# சக்குடியில் கற்குவியல்

## (அட்டைப்படக் கட்டுரை)

'' மதுரை திருப்பூவணம் இடையே உள்ள சக்குடி என்ற ஊரில் சிதிலமடைந்த இரு கோயில்களைக் கண்ட என் கல் நெஞ்சுகூட கரைந்து, கண்களில் குருதி வழிந்தது! '' என்று அழகப்பா பல்கலைக் கழகத்தில் பெரும்பதவியில் உள்ள மின் தமிழ் அன்பர் திரு. காளைராஜன் அவர்கள் எழுதியதைக் கண்டு, உடனே மதுரைக்கு அவசரகதியில் ரீச் தலைவர் சத்தியமூர்த்தியும் அடியேனும் பயணப்பட்டோம். 11ஆம் தேதி காலை அம்மை மீனாக்ஷியையும் சொக்கநாதரையும் வழிபட்டபின், சக்குடிக்குச் சென்றோம்.




சக்குடி சிவன் கோவில்

உண்மையிலேயே, கரையா நெஞ்சும் கரைய வைக்கும் சித்தன் அந்த சிவன், வெட்ட வெளியில் தலைகாட்டிக் கொண்டு, சலனமற்று சிவலிங்க ரூபமாய் எம்மை ஆழ்ந்து நோக்குவது போலிருந்தது! இபோதுதான் வழி தெரிந்ததா என்று கேட்கும் விதமாய்! எல்லார்க்கும் எல்லாவற்றுகும் வழி தெரிந்துவிட்டால் உலகிலே சிதிலமான கோயில்களே இருக்காதே!

சுற்றி நோக்குகையில், பெரும் மதில் சுவர்கள் சூழ, இரு தனி சன்னதிகளுடன் மதுரைக் கோயிலைப் போன்றே இருந்திருப்பதன் அடையாளங்களுடன், வெறும் எலும்புக் கூடாய் `இவைதான் கற்றளி கட்டிட மாதிரி' என்பதுபோல ஒரு சில மிச்சங்களுடன் கிடந்தது சிவன் கோயில். ஸ்வாமி அம்பாள் பெயர் தெரியவில்லை. சொக்கன் மீனாக்ஷி என்றே சொல்கின்றனர்.

அருகில் கிடந்த கற்களைக் கொண்டு எழுப்பப்பட்ட கட்டுக் கோயிலில் பெரிய அழகிய விநாயகர். மறுபுறம் உடைந்த நிலையில் சண்முகர். கற்றளியைத் தோண்டிப் பார்க்கையில், சுமார் 7 அடி உள்ளே புதைந்து போயுள்ளதாகத் தெரிகிறது. குறுக்கே ஓடும் மண்பாதையும் நீர் நிலைக் கரையும் சமீபத்தியவை என்று கிராமத்தினர் ஒப்புக் கொள்கின்றனர். இரண்டு கற்குவியல்களே இரு சன்னதிகள். அழகிய நந்தியும், அதன் பின்னே பாதி தரையில் மூழ்கிய நிலையில் அரசன் உருவம் தாங்கிய ஒரு கல்வெட்டும் கண்டோம். 1314ஆம் நூற்றாண்டு கல்வெட்டு அது. மக்கள் கைதூக்கி அதனை வெளியே எடுத்தனர். அது உடனடியாக சுத்தம் செய்யப்பட்டு, நேராக நிமிர்த்தி வைக்கப்பட்டது. ''...றை தருவார் திருவடி என் தலை மேலே ...'', அதாவது கோயில் பணி செய்யும் அடியாரின் திருவடிகளை என் சிரசில் தாங்குகிறேன்

என்கிறான் இந்த மன்னன்! எத்தனை கர்வமற்று, உயர்ந்த இறை சிந்தைனையோடு அவன் இருந்திருக்க வேண்டும்?



வெறும் எலும்புக் கூடாய் – கற்றளி கட்டிட மாதிரி

இந்த செய்கையில், ரீச்சின் கனவுகள் நனவாகின! ஆம். RURAL EDUCATION AND CONSERVATIO OF HERITAGE என்பதின் சுருக்கமே REACH. அதாவது, கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினாலேயே, புராதன சின்னங்களை நாம் காக்க முடியும் என்பது இங்கு நிரூபணம் ஆகிவிட்டதல்லவா? முன்பு வெறும் கல்லாய் இருந்தது, இன்று அப்பகுதியை ஆண்ட மன்னனின் கல்வெட்டுச்செய்தி என்பதறிந்த மக்கள் உடனடியாக சுத்தம் செய்து, அதனை தூக்கி நிறுத்தி வைத்து விட்டார்களே!



கூப்பிய கரங்களுடன் கல்வெட்டு!

அருகில் உள்ள குளம் முழுதுமாய் மூடி விட்டது. சாய்ந்த கற்கள் பெரும்பாலும் அதனுள் இருப்பதால், அதனையும் தூர் வாரி, கற்களை வெளியே எடுத்துவிடலாம் என்று கிராம மக்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

சரி, பெருமாள் கோயிலுக்கு செல்லலாம் என்றது அங்கு சென்றோம். அங்கே கோயிலோடு, இறைவனும் அல்லவா முகலாயப் படையெடுப்பிற்கு பலியாகி விட்டான்! 14ஆம் நூற்றாண்டின் மாலிக் கஃபூர் படையெடுப்பின் முகலாய அட்டூழியங்களின் நிச்சயத் தடயங்களாக ஸ்ரீதேவி பூதேவிகளின் தலைகளும், ஒரு பக்க மார்பகமும் சிதைக்கப்பட்டு, பெருமாளின் கிரீடமும் வெட்டப்பட்டு கிடந்த காட்சி....

நாம் கல்லாய் சமைந்துபோனோம்!

இதுவும் மிகப் பெரிய கோயிலாய் இருந்திருக்க வேண்டும். தற்போது வெறும் கற்குவியலாய் இருப்பது நமது புனரமைப்புப் பணிக்கு இறைவனால் வைக்கப்பட்டுள்ள ஒரு பரீட்சைதான். இக்கோயிலைச் சுற்றி ஒரு விசித்தர மரக்காடு உள்ளது. அம்மரங்களின் பழங்கள் தரையில் பட்ட உடனேயே மீண்டும் ஓடிப்போய் தாய் மர வேரோடு ஒட்டிக் கொள்ளுமாம்!

திரு. காளைராஜனின் நண்பர்களான திரு. பூவலிங்கம் ஓய்வு பெற்ற பொறியாளர். நண்பர் சண்முகம் 60ஐக் கடந்த இளைஞர்! ஸ்தபதிகளைக் கொண்டு கல்லின் மேல் கல்லாக அடுக்கி கற்றளியைக் கட்டுவது மிகுந்த நேரம் மற்றும் பணச் செலவு ஆகுமே என்று நாங்கள் ரீச்சின் திட்டமிடுதல் குழுவில் பலமுறை விவாதம் செய்து, ஒரு கிரேனை வைத்துக் கொண்டு கற்களை எடுத்து அடுக்கினால் என்ன? என்று சமீபகாலங்களின் அதிகமாக விவாதித்துள்ளோம். அதற்கு விடை தருவது போல், என் அம்மை மீனாக்ஷி அன்பர் சண்முகத்தை நமக்கு அறிமுகம் செய்து வைத்தாள் போலும்! மானாமதுரை ப்ரத்யங்கரா



கோயில், ஸ்ரீரங்கம் புதுக் கோபுரம் பணிகளில் அவர்களாகவே திரு. சண்முகத்தின் கிரேனை உபயோகிக்கும் திறனைப் பற்றி கேட்டறிந்து, வலுக்கட்டாயமாய் அவரது சேவையை எடுத்துக் கொண்டுள்ளனர்! கோயில் என்றால், முதல் ஆளாய் நானும் என் கிரேனும் நிற்போம் என்கிறார் இந்த 'கிரேன் சண்முகம்!'.

ஊர் மக்களுடன் ரீச்சின் தலைவர் சத்தியமூர்த்தி மற்றும் சந்திரசேகர்.

ஊரில் சாமிநாதன், பாண்டியன் உட்பட பல பெரியவர்கள் கோயிலைக் கட்ட முன்



வந்துள்ளனர். வெளிநாடுகளில் வாழ் பல அன்பர்கள் சக்குடியிலிருந்து சென்றவர்களே. இங்குள்ள இளைஞர்கள், சிறுவர்கள் குழாம் ஒன்றும் உள்ளது. அது ராமாயணத்து அணில் போன்ற வலிமையும், ஆர்வமும் மிக்கது. இச்சிறுவர்கள் கூறித்தான், அருகில் ஒரு வீட்டிலிருந்த பெரிய கல்வெட்டைக் கண்டோம்! அமரும் கல்லாக இருக்கும் அதை சுத்தப்படுத்திப் பார்க்கையில்

..சித்ராபானு வருடம் ஆவணி மாதம் 26ஆம் தேதி மதுரை சுந்தராஜபெருமாள் கோயில் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் தம்பி ஸ்ரீராம ஐயங்கார் ...குமாரன் கிருஷ்ண ஐயங்காரின் பாரியாள் ... அம்மாள் செய்த தருமமும்...(நிலக் கணக்குகள்) ... காளமேகம்...'' என்று வரும் சில பகுதிகளை ரீச் கல்வெட்டாய்வாளர் திரு.ராமசந்திரன் அவர்கள் உதவியுடன் படித்தறிந்தோம். ஆடுமாடுகள் முதுகு தேய்த்தும், மக்கள் அதன் மேல் உட்கார்ந்தும் அந்த கல் மிகவும் தேய்ந்து போய் இருந்தது.

விசாரித்துப் பார்த்தால், அந்த ஊரிலேயே 85 மதிக்கத்தக்க பெரியவரான துரைசாமித் தேவர், ``ஆமாம், இந்த இடமெல்லாம் அயருங்க இருந்த இடந்தான்! சுமார் 700 ஏக்கரா இருந்தது. கோயில்லாம் அவங்க நிர்வகிச்சாங்க. அப்படியே விட்டுப் போனவங்கதான். அப்புறம் வரல. இப்ப யார் யாரோ அனுபவிக்கிறங்க,''என்கிறார்! மேற்படி சொன்ன சுமார் 350 ஆண்டுகள் பழமையாகக் கருதப்படும் கல்வெட்டின் மூலம், ஐயங்காரின் மனைவி தாமாக சுய முடிவு எடுக்கும் தன்மையும், பெண்கள் சம உரிமையும் இருந்து வந்துள்ளது, தெள்ளத் தெளிவாக உள்ளது. ஏதோ

மேல் நாட்டவர் வந்துதான் பெண்களுக்கு சுய மரியாதையும், நாகரீகமும் கற்றுத்தந்ததாக அல்லவா மேலைநாட்டவர் எழுதி வருகின்றனர்?

இதுவே, தற்போதைய மதுரை திட்டமிட்டு கட்டப்படுமுன் ஆதி மதுரையாகவும், மீனாக்ஷி கோயிலாகவும் அழகர் கோயிலாகவும் இருந்தது என்கிற நம்பிக்கை இம்மக்களிடையே இன்றும் உள்ளது. ஆனால் 14 ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஏன் அத்தனை அந்தணர்கள் ஊரை விட்டே போனார்கள்? ஏன் கோயில்கள் அப்படியே காலம் கடந்து இன்று 21ஆம் நூற்றாண்டு வரை புனரமைப்புக்குக் காத்திருக்கிறது? விடை அறியோம்! ``இன்னார்க்கு இன்னாரென்று எழுதி வைத்த தேவன் இன்னார்க்கு இப்பணி என்றும் எழுதி வைத்தான் போலும்!

பிப்ரவரி 29ம் தேதி ஊர் மக்கள் ப்ரஸ்ன வல்லுநர் திரு. பாண்டியராஜனின் சொற்படி, ஒரு கூட்டு வழிபாட்டினை சிறப்பாக நடத்தினர். அவர் ப்ரஸ்னம் பார்த்ததில், இந்த சிவாலயம், ரிஷி பீடமாய் இருந்துள்ளது. அதாவது ரிஷிகள் பலர் வந்து பூஜித்த சிவன். களப்பிரர் காலத்தில் காபாலிகர்கள் அதிகம் இருந்ததாகவும், வீர சைவர்களுக்கு ஆதிபீடமாகவும் இருந்துள்ளதாகவும் ப்ரச்னத்தில் தெரிய வந்துள்ளது. பாலாலயம் செய்து, பல நித்ய வழிபாடுகள் செய்து, மீண்டும் இக்கோயில்களுக்கு சாந்நிதியம் கொணர்ந்து, கலாகர்ஷணம் செய்து கோயில்களை புனரமைக்கலாம் என்று பிரஸ்னத்தில் வந்ததாக அவர் கூறினார்.

சக்குடிப் பெருமாளும், சிவனாரும் தத்தமது தேவியர்களுடன் கோயில்களில் அமர, இவ்விரு கோயில்களும் மீண்டும் அழகுடன் நிமிர்ந்து நிற்க, நிச்சயம் நீங்கள் எல்லாரும் பிரார்த்தனையும், பொருள் உதவியும் செய்ய வேண்டும் என நம்புகிறோம். மதுரை செல்லும் அன்பர்கள் ஒருமுறை ஆதிபீடமாம் சக்குடிக்கும் சென்று வரலாமே?

இக்கோயிலுக்கான நன்கொடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

**REACH details plus**

சக்குடி கோவில்கள் புனரமைப்புக் குழு
சக்குடி அஞ்சல்
மதுரை 625020.

**தொலைபேசி எண்கள்: ரீச் மதுரை குழுவினர்:**

திரு. காளைராஜன் 9443501912,
மின்னஞ்சல்: kalairajan26@gmail.com

திரு. பூவலிங்கம் 9543865522

திரு. கிரேன் சண்முகம் 9092177782

மதுரை ப்ரஸ்ன வல்லுநர்

திரு. பாண்டியராஜன் 9842118989

சக்குடி திரு. சாமிநாதன் 9894152095

சக்குடி ம.ரவிசந்திரன் 9952504110

**– J. சந்திரசேகரன்**
வரலாற்று ஆர்வலர், ரீச் PRO.

படங்களை இணையத்தில் இந்த உரலிகளில் காணலாம்:

https://picasaweb.google.com/111020195956704115146/
ChakkudiFeb2012?authuser=0&authkey=Gv1sRgCJH8qZuDzazYAg&feat=directlink

http://kalairajan26.blogspot.in/2012/02/sakkudi-12-feb-12.html

http://kalairajan26.blogspot.in/2012/02/sakkudi-perumal-temple-renovation.html

# ரீச் கல்வெட்டு வகுப்பில் ஒரு களஆய்வு

**ராஜேந்திர சோழனின் பள்ளிப்படையைக் கண்டுபித்து விட்டோமா!**

ரீச் பவுண்டேஷனின் கல்வெட்டுக்கள் படிப்பதற்கான வகுப்புகளின் இறுதி அம்சமாக ஒரு கலாச்சார சுற்றுலா அழைத்துச் செல்வது வழக்கம். கடந்த மாதம், சென்னை – காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில், காஞ்சிபுரத்தைத் தாண்டி ஓச்சேரியிலிருந்து ஊருக்குள் இடது புரம் திரும்பி, பாலாற்றைக் கடந்து, மேலே ஏறி, பிரம்மதேசம் செல்லும் முன், பச்சை வயல்வெளிகள் சூழ புதூர் எனும் ஊரின் வெளியே கரும்புத் தோட்டத்தினுள்ளிருந்து திடீரெனப் பார்வையில் படுகிறது ஒரு அருமையான கற்றளிக் கோயில். காலத்தால் சிதைவடைந்த நிலையில் இருக்கும் கற்றளி. வேசர விமானம். விமானத்தைச் சுற்றி மண்டிக்கிடக்கும் புதர்கள், சமீபத்தில் சென்னையைச் சார்ந்த உழவாரப் பணி செய்யும் அன்பர்களால் நீக்கப்பட்ட மரங்கள் சிதறிக் கிடக்கும் கற்கள் என ஒரு போர்களத்தைப் போல் இருந்த்து அந்தக் காட்சி.

**ருத்திர சோலை மஹாதேவர் கோவில்**

ஆர்வத்துடன் ரீச் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் ராமசந்திரன் அவர்கள் அருகே போய்ப் பார்த்தால், அருமையான கல்வெட்டுகள் சுவர்கள் முழுதும்! அவரும், மாணவர்களும் அவற்றை படித்துக் கொண்டே செல்கிறார்கள். மேலே கற்களாலான விமானத்தை ஏறிப் பார்க்க சிலர் முற்படுகின்றனர். (''அங்கே நிறைய பாம்பெல்லாம் இருக்கு ஸார், மேலே ஏறினா பாத்துப் போங்க'' மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள்.) ப்ரஸ்தரம் எனப்படுகிற, கோயிலைச் சுற்றியமைந்த சுவர்களில் பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த கல்வெட்டுகள் காணக்கிடைக்கின்றன. கோயிலின் வடபுறம் அமைந்த சுவரில் முதல் குலோத்துங்க சோழனின் 21ம் ஆண்டு ஆட்சிக்காலத்திய (கி.பி.1091) கல்வெட்டு1, அக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்களைப் பற்றிய குறிப்புகளைத் தருகின்றது. இன்னும் பல்வேறு காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன. இந்தக் கல்வெட்டுகலைப் படித்தபோதுதான் நாங்கள் ராஜெந்திர சோழனின் பள்ளிப்படைவீட்டைக் கண்டுபித்தோமா என்ற பெர்மையான ஐயம் வந்தது. 2 (1,2)

குலோத்துங்க சோழன் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள இவ்வூரின் அப்போதைய பெயர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துத் தாமர் கோட்டத்துத் தாமர் நாட்டு தீனசிந்தாமணி சதுர்வேதி மங்கலம். கோயிலின் பெயர் ஸ்ரீ ருத்ரசோலை . தெய்வம் மஹாதேவர்

இக்கோயிலினின்று ஏறக்குறைய மூன்று கிலோமீட்டர் தொலைவில் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் அமைந்துள்ள கோயிலில் ராஜேந்திர சோழனின் பள்ளிப்படை பற்றிய குறிப்புகள் காணக்கிடைத்துள்ளன. இந்த ருத்ரசோலை அப்பள்ளிப்படையாக இருக்க வாய்ப்புகள் உள்ளதாக கருதப்படுகிறது. . மேலும் பன்னிரண்டாம் திருமுறை திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்தில் 84ஆம் பாடலில் இடம்பெறும் உருத்திரசோலை3, காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் அருகில் இன்றும் அதே பெயரில் விளங்குகிறது. இது கச்சி மயானம் எனவும் வழங்கப்படுகிறது.

உருத்திரசோலை என்ற வழக்கு இறுதிச்சடங்குகள் நடைபெறும் இடத்தைக் குறிக்கும் பெயராக இருக்க வாய்ப்புகள் உள்ளன. தென்மாவட்டங்களில் சில

இடங்களில் நந்தவனம் என்ற சொல் மயானத்தைக் குறிக்கப் பயன்படுவதும் ஒப்புநோக்கத்தக்கது. இதனாலும் ருத்ரசோலை எனக் குறிக்கப்பெறும் மஹாதேவர் கோயில், ராஜேந்திர சோழன் பள்ளிப்படையாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. இப்பகுதியைச் சார்ந்து இன்னும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் இக்கோயில் மற்றும் ராஜேந்திர சோழன் பள்ளிப்படை குறித்த தெளிவான உண்மைகள் உலகுக்குத் தெரிய வரலாம்.

**கல்வெட்டுகள் விவரம்:**

அக்கோவிலில் படித்தறிந்த கல்வெட்டு வாசகங்கள்:

1.ஸ்வஸ்தி ஸ்ரீ புகழ்சூதபுணரி அகழ்சூழ்ந்த புவியில்
பொன்னேமியளவும் தன்னேமி நடப்ப
விளங்குசயமகளை
இளங்கோப்பருவத்துச் சக்கரக்கோட்டத்து
விக்கிரமத்தொழிலால்
மணம்புணர்ந்து மதவரையீட்டம் வயிராகரத்து வாரி
அயிர்முனைக்கொந்தள வரைசர் தந்தளமிரிய
வாளுறை கழித்துத் தோள்வலிகாட்டிப்
போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி
வடதிசை வாகை சூடித்
தென்திசைதேமருகமலப்
பூமகள்பொதுமையும் பொன்னியாடை நன்னிலப்பாவை
தனிமையும் தவிர்த்துப்
புனிதத்திருமணிமகுடமுரிமையற்சூடித்
தன்னடியிரண்டு தடமுடியாகத் தென்னில வேந்தர்
சூட முன்னை மநுவாறு பெருக கலியாறு வறுப்பச்
செங்கோல்
திசைதொறும் செல்ல வெண்குடை இருநில
விளாகமெங்கனும்
தனாது திருநிலவெண்ணிலாத்திகழ
ஒருதனிமேருவிற்
புலிவிளையாட வார்கடந்தீவாந்தரத்துப்
பூவர்திரைவிடுத்துக் கலஞ்சொரி களிறு முறை
நிற்ப(ப்) விளங்கிய தென்னவன் கருந்தலை
பருந்தலைத்திடத் தன் பொன்னகர்ப்
புறத்திடைக்கிடப்ப
விண்ணின் பிற்குலப்பிறை போல்
இப்பிழையென்னுஞ்
சொல்லெதிர் கோடிற்றல்லது தன்கை வில்லெதிர்
கோடா
விக்கலன் கல்லதர் நங்கிலிதுடங்கி மண்ணூர்
நடுவெனத்
துங்கபத்திரியளவுந் துரத்தி வெங்கலம்படை
வெங்களிறு
விட்ட தன்மானமுங் கூரிய வீரமுங் கிடப்ப ஏறின
மலைகளும் முதுகு நெளிபட இழிந்த நெதிகளும்
சுழன்றுடைந்தோட தலைவிரித்தலமர
குடதிசை தன்நாளுகந்த தானுந்தானையும்
பன்னாளீட்டம்
பல்பல முதுகும் செயப்பெருந்திருவும் பழியுகந்து
கொடுத்த புகழின் செல்வியும் வாளாவிட்ட
மடந்தையரீட்டமும் மீளாது குடுத்த
வெங்கரிநிறையும் கங்கமண்டலமும் சிங்கனமெ
பாணியிரண்டுமொரு விசைக் கைக்கொண்டுயீண்ட
புகழொடு பாண்டி மண்டலமும் கொள்ள
திருவுள்ளத் தடைத்து வெள்ளவரு பரித்தலங்கள்
பொருகரித்தலங்களும் தந்திரவாயும் உடைத்தாய
வடகடல் தென்கடலாவது போலத் தன்பெருஞ்
சேனை ஏவி
பஞ்சவரை ஞ்சி வெருவி நெளித்தோடி
அரணெனப் புக்க காடரத்துடைத்து
நாடிடைப்படுத்து
மற்றவர் தம்மை வனசரராக்கியும்
பேரரசைவெஞ்சுரமேற்றிக்
கொற்றவிஜயஸ்தம்பம் திசைதொறும் நிறுத்தி
முத்தின் சலாபமும் முத்தமிழ் பொதியலும்
வெங்கரி படு மைய்யச் செய்யமும் கன்னியும்
கைக்கொண்டருளித் தென்னாட்டவர்
விடுஸாவேரெல்லாம்
தனி விசும்பேற மாவேறியதன் வருதனித்
தலைவனாக
குறுகலர் குலைக கோட்டாறுட்பட
நெறிகடோறும் நிலைகளிட்டருளி
திரைகொளாரழுந்திருப் புயத்தலங்கலும் பொழிய
வீரமும் தியாகமும் விளங்கப் பார்தொழ
சிவநிடத்துமையென தீனசிந்தாமணி
புவனமுழுதுடையாள் இருப்ப அவநுடன்
சங்கை வீற்றிருந்தருள மங்கையர் திலகம்
ஏழிசைவல்லி ஏழுலகுடையிருப்ப
ஊழி புவனமுழுதுடையாளொடும்
வீரசிம்மாசினத்து வீற்றிருந்தருளிந
கோவிராஜகேஸரி பன்மரான ஸக்ரவர்த்திகள்
ஸ்ரீ குலோத்துங்க சோழற்குயாண்டு இருபத்தொன்று
ஆவது
ஜெயங்கொண்டசோழ மண்டலத்துத் தாமர்
கோட்டத்துத்

தாமர் நாட்டு தீனசிந்தாமணி சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீருத்ரசோலை மஹாதேவர் ஆதிதாஸசண்டேஸ்வரற்கு
இவ்வூர் ப்ராஹ்மணன் காசியபன் நம்பி தாமோதரன் கிரமவித்தன்
விற்றநிலம் வடகழநி ராஜமல்லப்பெருவதிக்கு மேற்கு
வெக்காவுக்குத் தெற்கு இரண்டாங்கண்ணாற்றுத்தடியினாற்குழி
நூற்றொருபத்துக்குக் கீழ்பாக்கெல்லை
சிறுகுளத்தூர் அளகசன்மகிரமவித்தனும் தம்பியும் பூமிக்கு மேற்கு தென்பாற்கெல்லை சோழபாண்டியப்
பேராற்றுக்கு வடக்கும் மேல்பாக்கெல்லை
ஸ்ரீகைலாசமுடைய மஹாதேவர்தேவதானத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை கண்ணாற்று வாய்க்காலுக்குத்
தெற்கும் இந்நான்கெல்லை உள்ளும் நடுவுபட்ட பூமிதடியிரண்டினாற்குழி ஐந்நூற்றொருபதும்
இத்தேவற்குயாண்டு பதினான்காவது பாக்கத்து ஸ்ரீ போந்தைக்கிரமவித்தன் பக்கல் கொண்டுடைய பூமிஇங்கேய் ராஜமல்லப்பெருவதிக்குக்
கிழக்கு வெக்காவுக்குத் தெற்கு இரண்டாங்கண்ணாற்றுத்
தடியிரண்டுநாற்குழி நானூற்றைம்பத்து சின்னத்துக்கும்
கீழ்பாற்கெல்லை கொல்லைநிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை ஸ்ரீகைலாஸமுடையார் தேவதானத்துக்கு வடக்கும்
மேல்பாற்கெல்லை பெருமண்டபத்து மஹாவிஷ்ணுக்கள் தேவதானத்துக் கிழக்கும் வடபாற்கெல்லை ஸ்ரீ போந்தைக்கிரம வித்தன் பூமிக்குத் தெற்கும்
இந்நான்கெல்லை உள்ளும் நடுவுபட்ட பூமிதடியிரண்டினாற்குழி
ஐநூற்றைம்பத்துச் சின்னமும் இங்கேய் மேற்படியார் பக்கல் கொண்டுடைய
பூமி இக்கண்ணாற்றுக்குழி நூற்றைம்பத்துச் சின்னத்துக்குக்
கீழ்பாற்கெல்லை ஸ்ரீ கைலாஸமுடையார் தேவதானத்து மேற்கும்
தென்பாற்கெல்லை கண்ணாற்று வாய்க்காலுக்கு வடக்கும்
மேல்பாற்கெல்லை இத்தேவர் திருமுற்றத்துக்குக் கிழக்கும்
வடபாற்கெல்லை பாதிரித்திருக் கதவக்கிரமவித்தன் பூமிக்குதெற்கும்
இந்நான்கெல்லைக்கு நடுவுபட்டபூமி குழி நூற்றைம்பத்துச் சின்னமும் ஆகக்குழி அறுநூற்றுச் சின்னமும்
கமவின்படி மிகுதிக் குறைவுள்ளடங்கவும்
இத்தேவற்குயாண்டு இருபத்தொன்றாவது நரையூர் மண்டையபட்டன்
2. விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலத்து மஹாதேவ பெருங்குடிப் பெருமக்களும்
போந்தையுடையார் பகலிருக்கையிலே கூட்டங்குறைவறக்
கூடியிருந்து நம்மூர் திருவெக்காவின் தென்கரை ஸ்ரீ சோலைமஹாதேவர் ஆதிதாசர் சண்டேஸ்வரர் பக்கல்திரவியம் கொண்டு இவ்வாக்கமுடை யளவிலும் தரத்திலும்
கொல்லைநிலம் கீழ்பாற்கெல்லை
சிற்றம்பலச்சேரியில் வடக்கில் புற்றுக்கும்
மணற்பாக்கத்து உதயதிவாகர பட்டன்
உள்ளிட்டார் இறைநிலத்துக்கு வடக்கும்
கிழக்கும் மேல்பாற்கெல்லை மணற்பா(க்க)த்து சேந்தைசன்ம கிரமவித்தன் இறைநிலத்துக்கும் ஈரங்கொல்லி
கெல்லின குழிக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை இத்தேவர் வாய்க்காலுக்குத் தெ(ற்கு)ம் இந்நான்கெல்லை

3சகாப்தம் 1285 மேல் ஸோபகிருது சம்வத்சரத்து தனுர் ஞாயிற்று பூர்வ பக்ஷத்து ஏகாதசியும் புதன்கிழமையும்
புனர்பூசத்து நாள் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துத்
தாமல் கோட்டத்துத் தாமல் நாட்டு கரைக்கோட்டு பிரஹ்மதேசத்து உடையார் ஸ்ரீ உருத்திரசோலை உடைய நாதற்கு உதகபூர்வதன்மதானமாக வைத்த திருநந்தாவிளக்கு மூன்றுக்கு விட்ட
ஸ்ரீ மன்மகா மண்டலேஸ்வரன் ஹரிராய விபாடன் பாஷைக்குத் தப்பும் இராயர்கண்டன் பூவராய கண்டன்
பக்ஷிம பூர்வ சமுத்திராதிபதி ஸ்ரீ பொக்கண்ண உடையார்
மகனார் ஸ்ரீ வீரகுமார கம்பண்ண உடையார்
மஹாப்ரதானி ஸ்ரீ சோமைய தண்ணாயக்கர்
காரியப்பேர் வித்தரசர் நிருபப்படிக்கு
இராகுதேவரும் ஆராத்தியரும் தம்மம் தங்கள் திருமடைவிளாகத்து வாணியர் சேனை அங்காடியர் சிவன்படவர்
எடுத்து நடத்தும் பேர் மற்றும் இத்திருமடைவிளாகம்

நோக்கியிருக்கும்
ஆயகுடி மக்கள் உள்ள பேர்க்கும் ஆயம்
உள்ளாயம் நூலாயம்
நாட்டு உதகபூர்வதன்மதானமாக சர்வமான்ய
இறையிலி குடுத்தோம்.
இத்தன்மத்துக்கு விரோதம் பண்ணினவன் கெங்கை

4. தூண்டு சோதியொன் றெழுந்திருள் துரக்கும்
சுரர்கள் வந்துசூழ் உருத்திர சோலை
வேண்டி னார்கள்தம் பிறப்பினை யொழிக்கும்
மெய்ந்நெ றிக்கண்நின் றார்கள்தாம் விரும்பித்
தீண்டில் யாவையுஞ் செம்பொனாக் குவதோர்
சிலையும் உண்டுரை செய்வதற் கரிதால்
ஆண்ட நாயகி சமயங்க ளாறும்
அகில யோனியும் அளிக்குமந் நகரம்.

இக்கோயிலில் கல்வெட்டுக்கள் வாசிப்பது படியெடுக்கும் பயிற்சி ஆகியவை முடிந்த பிறகு அருகில் இருக்கும் தொல்லியல் துறையால் அழகுறப் பரமரிக்கப்படும் பிரம்மதேசத்துக்குச் சென்றோம்.

செங்காட்டுக் கோட்டத்துச் செங்காட்டு நாட்டுப் பெருநல்லூரான கேரளாந்தகநல்லூர்

பென்னலூர் எனப்படும் பெருநல்லூர்

களப்பயிற்சியில் பிரமதேசத்துக்குப் பிறகு சென்ற இடம் பெண்ணலூர். அங்குள்ள கோயில் கல்வெட்டுகளை திரு.ராமச்சந்திரன் அவர்கள் உதவியுடன் வாசித்தபிறகுதான் அவ்வூர்ப் பெயரின் சரியான வடிவம் தெரியவந்தது.

இப்போதைய பெண்ணல்லூரின் பெயராக அங்குள்ள கல்வெட்டுகளில் காணப்படும் பெயர் – செங்காட்டுக் கோட்டத்துச் செங்காட்டு நாட்டுப் பெருநல்லூரான கேரளாந்தகநல்லூர் கோயிலின் பெயர் ஸ்ரீ ஸ்ரீஅகஸ்தீஸ்வரர்


பிரம்ம தேசம்

கோயில் இக்கோயிலும் மிகவும் சிதிலமடைந்த நிலையில்தான் காணப்படுகிறது. விமானப்பகுதியிலும், பிரஸ்தரங்களிலும் மரங்கள் முளைத்து ஓங்கி வளர்ந்துள்ளன. கூரை திறந்த நிலையில் இருக்கும் மூலவர் சன்னிதிக்கு மேல் நிற்கும் மரக்கிளைகள்தான் மூலவருக்கு நிழல் தருகின்றன. சுற்றுச்சுவர்களில் இருக்கும் பிற தெய்வங்களில் கலையழகு. விதவிதமான பாவனைகள் காட்டும் பூதவரி வடிவங்களில் கற்பனை நயங்கள். ஆனால் கல்லுக்குள் தேரை, குடத்துக்குள் விளக்கு. அந்த ஊரைச் சேர்ந்தவருக்கே அக்கோயிலில் பெயர் தெரியாமலிருந்தது வேதனையளித்தது. ஆனால் ஆவலுடன் கோயிலுக்குப் பெயர்ப் பலகை அமைக்கப்போவதாகக் கூறி கோயில் பெயரையும், நாம் படித்து அறிந்துகொண்ட ஊரின் பெயரையும் எழுதி வாங்கிக் கொண்டார்.

பெருநல்லூர் கோயில் கல்வெட்டுகளில் இருங்காட்டுக் கோட்டை பற்றிய குறிப்புகளும் கிடைத்தன. இருங்காட்டுக் கோட்டையின் அப்போதைய பெயர் – உலகளந்த சோழ சதுர்வேதி மங்கலம்.



சோழர் ஆதிக்கத்தின் சுவடுகள் அதிகம் பெறப்படும் இந்தக் கோயிலும், இதைச் சார்ந்த பகுதிகளும் விரிவான கள ஆய்வை வேண்டுபவை.

– அரவிந்தன் நீலகண்டன்.
எழுத்தாளர்

# REACH ACTIVITIES

## Happenings…as on March 2012



1. The final stage of re-fixing the flooring of the 100 pillared hall at Varadaraja Perumal temple, Kanchipuram.



2. The Gangai Kondan Mandap situated exactly opposite the Kanchi Mutt, was falling off due to heavy roofi accretion and a broken main lintel stone weighing some 6 tonnes! Traditional craftsmen who make the Umbrellas for the Utsavams across the city continue their work only in this mandapam. After some furore in local dailies, and our timely intervention by supporting the Lintel with some wooden scaffolding, we could thwart the falling off. Timely help from member parton Narayanan a Power plant Industrialist, helped us obtain permission and repair the whole Gangai Kondan Mandap. While cleaning it was revealed that paintings had been there once throughout the mandap and has been scrapped off. Also are seen some intricate inscriptions at the flooring. Work is on…



3. The Brahmanya Lingam temple which was on the road side near Orikkai, where the MahaSwami Maha Periyaval did Puja and stayed there many a number of times, is renovated by



our trustee Shri.S. Hariharan. After obtaining Deiva Prasnam, Puja was performed and renovating the temple to a proper structure has begun.



4. Omega International School children from 8th standard were taken to Kanchipuram to educate them on the heritage & temple history of Kanchipuram. Varadaraja Perumal temple and Kailasanathar temple were shown to them, which resulted in 2 of the children ending up writing poetry on the same! (Picture 5)



5. Dr T Satyamurthy inspected many a sites during Dec 2011 - Feb 2012. Few of them are Alathur (Picture 6) on ECR road, Pudhur near Ocheri, Pennalur near Sriperumbudur (Pic 7 ) and Chakkudi near Madurai in

January 2012. Chakudi temple adorns as the cover story in this issue.



6. Dr Satyamurthy and his team comprising Secretary J.Chandra sekaran, Archeaologists Parandaman, Madivanan and Shankar are currently excavating a old Shiva temple site, thus



exposing the whole plan which was buried underneath some 10 feet below, in Peranambakkam near Devikapuram, Polur.



7. An abandoned Shiva temple was taken up for renovation by the efforts of Call taxi drivers from Chennai in a village called Thandurai. When the REACH team inspected the temple, it was found that the nearby Vishnu temple was totally razed down to build a new modern structure, much to the dismay of the team, but luckily the presence of mind of these taxi- drivers, humble heritage wardens, made us give a request letter to the HR&CE officials to save the Shiva temple from destruction and also utilize the razed stones from the Vishnu temple to renovate some other heritage temple nearby. The Shiva temple, with rich inscriptions was again brought back to action, with the result of Deiva Prasnam, which mentions the Shiva and Ambal to be very powerful, namely Ratna Garbeswarar and Swarna Kalikambal. It is learnt that Kubera along with his wife came to this shrine to pray to the Lord to protect his wealth.! Kambanna Devar inscriptions and some Telugu inscriptions mentioning the village as Thandurai and Sitaramapuramu are seen.



8. REACH members made an heritage trip on 4th of February to Karandai, Thoosi Mamandur, and Seeyamangalam. The blogs of few members are seen here: http://reachhistory.blogspot.in/2012/02/4th-february-heritage-trip.html

9. REACH FOUNDATION started its Madurai Chapter in association with Pandya Nadu Centre for Historical research, on 4th Feb 2012 at their office located at Room No.310, 184/5,




KPS Arcade, Bye-Pass Road, Madurai 625010.

Archaeology Members Shri. C. Santhalingam, Shri. P Rajendran and B. Athmanathan, and new members Shri. S. Poovalingam, Karaikudi K. Kalairajan, Chakkudi R.Swaminathan and M. Ravichandran along with REACH Founder President Dr T Satyamurthy and REACH Secretary and PRO J. Chandra sekaran, attended and discussed the ideals of REACH and wished that the awareness to conserve and preserve heritage structures be spread to rural public down South also.

